உ

சிவமயம்

# பன்னிரு திருமுறை

[வினாவிடைத் தொகுப்பு]




இந்து சமய நெறியினர்

ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.


1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பன்னிரு திருமுறை

( வினாவிடைத் தொகுப்பு )









## இந்து சமய நெறியினர்

ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நூல் : பன்னிரு திருமுறை (வினாவிடைத் தொகுப்பு)

ஆக்கம் : இந்து சமயநெறி ஆசிரிய மாணவர்கள் 1999
(கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை.)

நெறிப்படுத்துகை : திருமதி கலாதேவி பொன்னம்பலம்
(காப்பாளர் இந்துமாமன்றம்)

அச்சுப்பதிவு : ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்.

விலை : இருபது ரூபா

முதற்பதிவு : பங்குனி 1999.

## பன்னிரு திருமுறைகளை அருளிய அருளாளர்கள்

திருஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாதவூரர் மற்றைத்
திருமாளிகைத்தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டராதித்தர் வேணாட்டடிகள்
வாய்ந்த திரு வாலியமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர்மூலர்
மன்னு திருவாலவாயார்
ஒரு காரைக்காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர் கீரர் கல்லாடனார்
ஒண்கபிலர் பரணர் மெய் உணரிளம் பெருமானோடு
ஓங்கும் அதிராவடிகளார்
திருமேவு பட்டினத்தடிகளோடு
நம்பியாண்டார் நம்பி சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருளிச் செய்த
தெய்வீகத் தன்மையோரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகள்

1] திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுக்க அருள் புரிந்தவர் யார் ?

திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார்

2] திருமுறைகளை வகுத்துத் தொகுத்தவர் யார் ?

நம்பியாண்டார் நம்பி

3] திருமுறைகளைத் தொகுப்பித்தவர் யார் ?

இராஜராஜசோழனான அபயகுலசேகரன் [கி.பி.945-1014]

4] இதனால் இவருக்கேற்பட்ட பெயர் என்ன ?

திருமுறைகண்ட சோழன்

5] நம்பியாண்டார்நம்பி தேவார ஏடுகளைக்கண்டெடுப்பதற்கு அருள் செய்யுமாறு தில்லை நடராஜப்பெருமானை வேண்டிப் பாடிய பாடல் எது ?

"கோயிற் திருப்பண்ணியார் திருவிருத்தம்"

6] பதினொரு திருமுறைகளையும் செப்பேடு செய்து எங்கு சேமித்துப் பாதுகாக்கப்பட்டது ?

திருவாரூர் தியாகராஜப் பெருமான் கோயிலில்

7] நம்பியாண்டார்நம்பி முதன் முதலில் தொகுத்தவை எவை ?

முதல் ஏழு திருமுறைகள்

8] அவற்றை எவ்வாறு அழைப்பர் ?

"அடங்கன் முறை"

9] நம்பியாண்டார் நம்பி எல்லாமாக தொகுத்த திருமுறைகள் எத்தனை ?

பதினொன்று

10] திருமுறைகள் வகுக்கப்பட்டமை பற்றிக் கூறும் நூல் எது ? இதன் ஆசிரியர் யார் ?

"திருமுறை கண்ட புராணம்"
உமாபதிசிவாச்சாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11] 12 ஆம் திருமுறை எம் மன்னன் காலத்தில் தொகுக்கப் பட்டது ?

அநபாயச்சோழன் எனப்படும் 2 ஆம் குலோத்துங்க மன்னன் காலத்தில் [கி. பி. 1133 - 1150]

12] திருமுறை என்றால் என்ன ?

திரு + முறை - திரு என்பது தெய்வத்தன்மையுடையது.

முறை என்றால் ஒழுங்கு. ஆகவே ஒழுங்கு முறையாக அமைந்த தெய்வப் பாடல்களே திருமுறையாகும்.

13] திருமுறைப் பாடல்களை ஓத முன்பும் ஓதிய பின்பும் "திருச்சிற்றம்பலம்" எனச் சொல்லப்படுவது ஏன் ?

தில்லையம்பலத்திலுள்ள "சிற்றம்பலம்" எனும் மண்டபத்திலே திருமுறை ஏடுகள் கண்டெடுக்கப்பட்டமையால் அவ்விறைவனின் மகிமையைப் பாடும் முகமாக திருச் சிற்றம்பலம் சொல்லப்படுகிறது.

14] 12 திருமுறைகளை இறைவன் சந்நிதியில் பாடுதலை ஆரம்பத்தில் எவ்வாறு வழங்கிவந்தனர் ? பாடுவோருக் குரிய தகுதி என்ன ?

திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் என வழங்கப்பட்டது. சிவதீட்சை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

15] திருமுறை ஓதும் முறையைக் கூறுக ?

நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து, விபூதி, உருத்திராக்கமணிந்து சுத்தமான இடத்திலேயமர்ந்து, ஒருமைமைப்பட்ட சிந்தையுடன் ஓதவேண்டும்.

16] திருமுறையை ஓதுவதால் ஏற்படும் பயன்கள் எவை ?

உலக இன்பங்கள் கிடைக்கப்பெறும், வேண்டுவார்க்கு வேண்டுவன கிடைக்கும், செய்த வினைகள் தீரும், வருத்தங்கள் அணுகாது, நல்வினைகள் தளரமாட்டா, இம்மையில் இகபர சுகம் கிடைக்கும், மறுமையில் வீடு பேறு கிடைக்கும்.

17] திருமுறை தந்தவர்களைச் சேக்கிழார் எவ்வாறு குறிப் பிடுகின்றார் ?

திறைமொழி மாந்தர்

18] திருமுறை ஆசிரியர்கள் மொத்தமாக எத்தனை பேர் !

திருவாலவாயுடைய இறைவன் உட்பட மொத்தம் 27 பேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19] முதல் மூன்று திருமுறைகளையும் அருளிச் செய்தவர் யார்?

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் [கி. பி 640 - 656]

20] இவர் எப்பதியில் அவதரித்தார்? அப்பதிக்கு வழங்கப் படுகின்ற வேறு பெயர்கள் எவை?

சீர்காழி — திருப்பிரமபுரம், வேணுபுரம், திருப்புகலி, திருவெங்குரு, திருத்தோணிபுரம், திருப்பூந்தராய், சிவபுரம், திருப்புறவம், திருச்சண்பை, கொச்சைவயம், திருக்கழுமலம்

21] திருஞானசம்பந்தருக்கு வழங்கப்படுகின்ற வேறு பெயர்கள் எவை?

பிள்ளையார், ஆளுடையபிள்ளையார், சிவஞானக்கன்று, தமிழ் விரகர், பரசமயகோளரி, சண்பையர் காவலன், கவுணியர்தலைவன், புகலியர்கோன், காழிவேந்தன், வைதிகாமணி, ஞானபோனகர், பாலறாவாயர்.

22] இவர் தாம் பாடிய பாடல்களை எவ்வாறு குறிப்பிட்டு உள்ளார்?

செந்தமிழ், ஒண்டமிழ், இன்தமிழ், பூந்தமிழ், திருநெறிய தமிழ், அருள் மாலைத் தமிழ், மறைவளருந் தமிழ்.

23] சம்பந்தர் பாடிய திருமுறைகளுள் எத்தனை பதிகங்கள் அடங்கியுள்ளன?

| | | | |
|---|---|---|---|
| முதலாம் திருமுறை | — | 136 | பதிகம் |
| இரண்டாம் திருமுறை | — | 122 | ,, |
| மூன்றாம் திருமுறை | — | 125 | ,, |
| மொத்தம் | | 383 | ,, |

[வெள்ளிப்பதிகம், திருவிடைவாய்ப் பதிகம் ஆகிய பிற்சேர்க்கப் பதிகங்களுடன் மொத்தம் 385 பதிகம்]

24] சம்பந்தர் பாடிய பதிகங்கள் எவை?

1. தலப் பதிகம்
2. திருநீலகண்டப் பதிகம்
3. திருஷேத்திரக் கோவை
4. கோளறு பதிகம்
5. பஞ்சாக்கரப் பதிகம்
6. நமச்சிவாயப் பதிகம்
7. திருப்பாசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25] பதிகங்களைப்பாட சம்பந்தர் தேர்ந்தெடுத்த பண்கள் எவை ?

| | |
|---|---|
| 1. நட்டபாடை<br>2. தக்கராகம்<br>3. பழந்தக்கராகம்<br>4. தக்கேசி<br>5. குறிஞ்சி<br>6. வியாழக் குறிஞ்சி<br>7. மேகராகக் குறிஞ்சி யாழ்முரி | முதலாம் திருமுறை |
| 8. இந்தளம்<br>9. சீகாமரம்<br>10. காந்தாரம்<br>11. பியந்தைக்காந்தாரம்<br>12. நட்டராகம்<br>13. செவ்வழி | இரண்டாம் திருமுறை |
| 14. காந்தார பஞ்சமம்<br>15. கொல்லி<br>16. கொல்லிக்கௌவாணம்<br>17. கௌசிகம்<br>18. பஞ்சமம்<br>19. சாதாரி<br>20. பழம்பஞ்சுரம்<br>21. புறநீர்மை<br>22. அந்தாளிக் குறிஞ்சி | மூன்றாம் திருமுறை |

26] பஞ்சாக்கரத் திருப்பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?

சீர்காழியில் சம்பந்தருக்கு உபநயனச்சடங்கு நிகழ்ந்த போது அந்தணர் யாவருக்கும் பஞ்சாக்கரத்தின் உண்மையை விளக்கும் முகமாகச் சம்பந்தரால் பாடப் பட்டது.

27] "காதலாகி" எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகம் எப்போது பாடப்பட்டது ?

சம்பந்தரின் திருமண வைபவத்தின் போது திருநல்லூர்ப் பெருமணம் எனும் ஆலயத்துள் தோன்றிய பேரொளியில் கலப்போருக்கு வீட்டு நெறியினை அறிவுறுத்தவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்சோதியில் கலப்போர் பாசம் நீங்கவும் பஞ்சாட்சரத்தை ஓதுமுகமாகச் சம்பந்தரால் பாடப்பட்டது.

28] சம்பந்தரின் திருமுறைப் பாடல்கள் எவ் ஒழுங்கு முறையில் அமைந்து காணப்படுகிறது ?

ஒரு பதிகத்திலுள்ள பாடல்களின் முதல் இரு அடிகளும் இறைவனைப் பற்றிக் கூறுவதாயும் இறுதி இரு அடிகளும் இறைவன் குடிகொண்டுள்ள தலத்தின் இயற்கைக் காட்சி பற்றியும் கூறுகிறது.

பதிகத்தின் 8 ஆவது பாடல் இராவணனைப் பற்றியும் 9 ஆவது பாடல் பிரமா திருமால் பற்றியும் 10 ஆவது பாடல் சமண பௌத்த மதத்தை கண்டித்தும் கூறுகிறது.

இறுதிப் பாடலஃன திருக்கடைக்காப்பு [முத்திரைக்கவி] அப்பாடலைப் பாடியவர் பாடுவதாலேற்படும் பயன் என்பன பற்றிக் கூறுவதாகவுள்ளது.

29] 4ம், 5ம், 6ம் திருமுறைகள் அருளியவர் யார் ? அவை எவை ?

திருநாவுக்கரசு நாயனார் [கி. பி 580 – 661]

| | | | | |
|---|---|---|---|---|
| 4ம் | திருமுறை | திருநேரிசை<br>திருவிருத்தம் | 113 | பதிகம் |
| 5ம் | ,, | திருக்குறுந்தொகை | 100 | ,, |
| 6ம் | ,, | திருத்தாண்டகம் | 99 | ,, |
| | | மொத்தம் | 312 | ,, |

30] நாவுக்கரசருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை ?

மருணீக்கியர், ஆளுடையஅரசு, தாண்டகவேந்தர், சொற்கோவாகீசர், அப்பர், உழவாரப்படையாளி, தருமசேனர், தேவர், அரையர், தமிழ்மொழித் தலைவர், தாண்டகச்சதுரர்.

31] இவரது பாடல்கள் அமைந்துள்ள பண்கள் எவை ?

கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், பழந்தக்கராகம், பஞ்சமம், பழம் பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், சாதாரி, காந்தார பஞ்சமம், குறிஞ்சி

31] ஆரம்பத்தில் தேவாரம் என வழங்கப்பட்டு வந்த பாடல்கள் எவை ?

திருநாவுக்கரசரது திருமுறைப் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33] நாவுக்கரசரது காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் யாவர் ?

சம்பந்தர், சிறுத்தொண்டர், அப்பூதியடிகள் குங்குலியக்கலியர், திருநீலகண்டர், திருநீலநக்கர், மங்கையற்கரசியார், குலச்சிறையார்,

34] ஏழாந் திருமுறையை அருளிச் செய்தவர் யார் ?

சுந்தரமூர்த்தி நாயனார் (கி. பி 692 – 710)

35] இவருக்கு வழங்கப்படுகின்ற வேறு திருநாமங்கள் எவை ?

நம்பியாரூரர், வன்றொண்டர், திருநாவலூரர், தம்பிரான்தோழர், சிங்கடியப்பன், வனப்பகையன், சைவஆண்டகையார், நாவலர்காவலர், ஆலாலசுந்தரர், ஆளுடையநம்பி, சேரமான்தோழர், திருத்தொண்டத் தொகையாளி

36] இவர் அருளிய பதிகங்கள் எத்தனை ?

100 பதிகங்கள்

37] அடியார்களைச் சிறப்பித்து முதன் முதலில் பாடியவர் யார் ?

சுந்தரமூர்த்தி நாயனார் (திருத்தொண்டத் தொகையில்)

38] திருத்தொண்டத் தொகையில் போற்றப்படும் அடியார்கள் யாவர் ?

63 தனியடியார்கள் (பெயர் குறிப்பிடப்பட்டோர்)
9 தொகையடியார் :-

1. தில்லை வாழ் அந்தணர்
2. அப்பாலும் அடிசார்ந்தார்
3. சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்
4. முழுநீறு பூசிய முனிவர்
5. பொய்யடிமை இல்லாத புலவர்
6. பத்தராய்ப்பணிவார்
7. பரமனையே படுவார்
8. திருவாரூர்ப் பிறந்தார்
9. முப்போதும் திருமேனி தீண்டுவார்

39] திருத்தொண்டத் தொகையைச் சுந்தரர் பாடிய சந்தர்ப்பம் எது ?

திருவாரூர் தலத்தைத் தரிசிக்கச் சென்ற சுந்தரர், அங்கு தேவாசிரியர் மண்டபத்திலேயிருந்த அடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பார்த்து "இவர்களுக்கு நான் அடியன் ஆகும் நாள் எந்நாளோ ?" என்று எண்ணி இறைவனை வணங்கியபோது! இறைவன் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என அடியெடுத்துக் கொடுத்து அவ்வடியார்களைப் பாடப்பணித்த வேளையில் சுந்தரர் திருத்தொண்டர் தொகையைப் பாடினார்.

40] சுந்தரர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் யாவர்?

சடையனார், இசைஞானியர், நரசிங்கமுனையர், விறல்மீண்டர், கோட்புலியார், ஏயர்கோன் கலிக்காமர், மானக்கஞ்சாறர், பெருமிழலைக்குறும்பர், சோமாசிமாறர், சேரமான்பெருமாள், கழற்சிங்கர், செருத்துணையார்

41] தேவார முதலிகள் மூவரும் பாடிய முதல் இறுதி தேவாரங்களைக் குறிப்பிடுக?

சம்பந்தர் : " தோடுடைய செவியன் "

— " நந்திநாமம் நமச்சிவாயவே "

அப்பர் : " கூற்றாயின வாறு "

— " ஒருவனையும் அல்லா துணரா "

சுந்தரர் : " பித்தாப் பிறை "

— " ஊழிதொறூழி முற்று "

42] இவர்களின் பாடல்கள் பெற்ற தலங்கள் எத்தனை?

274 தலங்கள்

43] அதிகமான பாடல்களைப் பெற்றுச் சிறந்து விளங்கும் தலம் எது?

சீர்காழியிலுள்ள பிரமபுரீசுவரர் ஆலயம் (71 பதிகம்)

44] திருவாரூர்த் தலம் எத்தனை பதிகங்களால் போற்றப் பட்டுள்ளது?

34 பதிகங்களால்

45] தில்லையம்பலம் எத்தனை பாடல்களால் போற்றப்பட் டுள்ளது?

11 பதிகங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46] இலங்கையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் எவை?

திருக்கோணேச்சரம் (சம்பந்தர் 11 பாடல்)

திருக்கேதீச்சரம் (சம்பந்தர் சுந்தரர் 22 பாடல்

47] தேவார முதலிகளின் பொதுப்பதிகங்கள் எத்தனை?

| | | |
|---|---|---|
| சம்பந்தர் | 7 | பதிகம் |
| நாவுக்கரசர் | 37 | பதிகம் |
| சுந்தரர் | 4 | பதிகம் |
| | 48 | |

48] தேவார முதலிகள் பற்றிப் பாடியவர்கள் யாவர்?

1) நம்பியாண்டார் நம்பி (திருத்தொண்டர் திருவந்தாதி)
2) உமாபதிசிவாச்சாரியார் (திருமுறைகண்ட புராணம்)
3) சேக்கிழார் (பெரிய புராணம்)
4) தாயுமானவர் (தாயுமானவர் பாடற்றிரட்டு)

49] "வேண்டுவார்க்கு வேண்டியன வழங்குவது திருவருள்" நாம் வேண்டுபவை சிலவற்றைக் கூறி, வழிபடும் பாடல் களையும் தருக.

1. தொல்வினைகள் தொலைந்து போக
   1) தோடுடைய செவியன் (சம்பந்தர் பதிகம்)
   2) விங்குவிளை கழனிமிகு (சம்பந்தர் பதிகம்)
   3) பட்டியேறுகந் தேறிப் (அப்பர் பதிகம்)
   4) அந்தணாளனுன் (சுந்தரர் பதிகம்)
2. தரித்திரம் நீங்கித் தனமுடன் வாழ
   1) இடரினும் தளரினும் (சம்பந்தர் பதிகம்)
   2) மெய்மை முற்றப் (சுந்தரர் பதிகம்)
   3) நெய்யும் பாலும் (சுந்தரர் பதிகம்)
3. வாக்கு வன்மை வளமாய்ப் பெருக
   1) பூசுவதும் வெண்ணீறு (மணிவாசகர் பதிகம்)
4. தீராப் பிணிகள் தீர
   1) அவ்வினைக் கிவ்வினை (சம்பந்தர் பதிகம்)
   3) துணிவளர் திங்கள் (சம்பந்தர் பதிகம்)
   2) மந்திரமாவது நீறு (சம்பந்தர் பதிகம்)

50] திருமுறைகளைத் தமிழ்வேதம் என அழைப்பது ஏன்?

வேதக் கருத்துக்களை தமிழில் வெளிப்படுத்துவதால்.

51] 8ம் திருமுறையை அருளிச் செய்தவர் யார்?

மாணிக்கவாசக சுவாமிகள் (கி. பி. 8ம் நூற்றாண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52] 8ம் திருமுறையில் இடம்பெறும் நூல்கள் எவை?

திருவாசகம், திருக்கோவையார்

53] திருவாசகத்தில் எத்தனை பதிகங்கள் எத்தனை பாடல்கள் இடம்பெற்றுள்ளன?

51 பதிகங்கள் – 658 பாடல்கள்

54] திருவாசகத்தின் முதல், இறுதி அடிகளைக் குறிப்பிடுக.

"நமச்சிவாய" என்ற திருவைந்தெழுத்துடன் ஆரம்பிக்கின்றது.

"முத்திநெறியறியாத" என்ற முத்தியைக் குறிப்பிடும் அடி இறுதியாகவுள்ளது.

55] மாணிக்கவாசகர் எங்கே பிறந்தார்?

பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில்

56] மாணிக்கவாசகரின் வேறு பெயர்கள் எவை?

திருவாதவூரர் (பிள்ளைத் திருநாமம்) ஆளுடைய அடிகள், தென்னவன் பிரமராஜன் (அரிமர்த்தன பாண்டியனால் வழங்கப்பட்டது) கோவை வேந்தன், மணிவாசகர், பெருந்துறைப் பிள்ளை.

57] மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொண்ட இடம் எது?

திருப்பெருந்துறையிலுள்ள குருந்தமர நிழல்

58] திருவாசகத்தைத் தேன் என அழைக்கப்படுவது ஏன்?

தேன் உடல்ப்பிணிக்கு மருந்தானது போல திருவாசகம் உயிர்ப் பிணிக்கு மருந்தாகும் என்பதால்

59] திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

டாக்டர். ஜீ. யு. போப்

60] மாணிக்கவாசகர் வரலாறு கூறும் புராணங்கள் எவை?

1. திருவுத்தர கோசமங்கைப் புராணம்
2. திருவாதவூரர் புராணம்
3. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
4. பரஞ்சோதிமாமுனிவர் திருவிளையாடற் புராணம்
5. திருப்பெருந்துறைப் புராணம்

61] திருவாசகத்துள் இடம் பெற்றுள்ள தலங்கள் எவை?

1. திருப்பெருந்துறை
2. தில்லை
3. உத்தரகோசமங்கை
4. திருவண்ணாமலை
5. திருக்கழுக்குன்றம்
6. திருத்தோணிபுரம்
7. திருவாரூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62] திருவாசகத்தின் பாயிரமாக அமைந்தவை எவை?

1. சிவபுராணம்
2. கீர்த்தித்திருவகவல்
3. திருவண்டப் பகுதி
4. போற்றித்திருவகவல்

63] திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்ட பதிகங்கள் எவை?

1. சிவபுராணம்
2. திருச்சதகம்
3. திருப்பள்ளி எழுச்சி
4. செத்திலாப் பத்து
5. அடைக்கலப்பத்து
6. ஆசைப்பத்து
7. அதிசயப் பத்து
8. புணர்ச்சிப் பத்து
9. வாழாப் பத்து
10. அருட் பத்து
11. பிரார்த்தனைப் பத்து
12. குழைத்த பத்து
13. உயிருண்ணிப்பத்து
14. பாண்டிப் பதிகம்
15. திருஏசறவு
16. அற்புதப் பத்து
17. சென்னிப் பத்து
18. திருவார்த்தை
19. திருவெண்பா
20. திருப்பண்டாய நான்மறை

64] தில்லையுள் அருளிச்செய்யப்பட்ட பதிகங்கள் எவை?

1. கீர்த்தித் திருவகவல்
2. திருவண்டப் பகுதி
3. போற்றித்திருவகவல்
4. திருப்பொற்சுண்ணம்
5. திருக்கோத்தும்பி
6. திருத்தெள்ளேணம்
7. திருச்சாழல்
8. திருப்பூவல்லி
9. திரு உந்தியார்
10. திருத்தோணோக்கம்
11. திருப்பொன்னூசல்
12. அன்னைப் பத்து
13. குயிற் பத்து
14. தசாங்கம்
15. கோயில் மூத்த திருப்பதிகம்
16. கோயிற் திருப்பதிகம்
17. கண்ட பத்து
18. அச்சப் பத்து
19. எண்ணப் பதிகம்
20. குலாப் பத்து
21. யாத்திரைப் பத்து
22. திருப்படை எழுச்சி
23. திருப்படை ஆட்சி
24. ஆனந்த மாலை
25. அச்சோப் பதிகம்

65] உத்திரகோசமங்கையில் அருளிச்செய்யப்பட்ட பதிகம் எது?
நீத்தல் விண்ணப்பம்

66] திருவண்ணாமலையில் அருளிச்செய்யப்பட்ட பதிகங்கள் எவை?

1. திருவெம்பாவை
2. திருவம்மானை

67] திருக்கழுக்குன்றத்தில் அருளிச்செய்யப்பட்ட பதிகம் எது?
கழுக்குன்றப் பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68] திருத்தோணிபுரத்தில் அருளிச் செய்யப்பட்ட பதிகம் எது?
பிடித்த பத்து

69] திருவாரூரில் அருளிச் செய்யப்பட்ட பதிகம் எது?
திருப்புலம்பல்

70] முதன் முதலில் கோவை நூலுக்கு கால்கோள் செய்தவர் யார்?
மாணிக்கவாசகர்

71] "ஞானப்பனுவல்" என அழைக்கப்படும் நூல் எது?
திருக்கோவையார்

72] அகப்பொருள் பற்றிய திருவாசகம் என அழைக்கப்படும் நூல் எது?
திருக்கோவையார் (திருச்சிற்றம்பலக் கோவையார்)

73] திருக்கோவையார் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது?
இயற்கைப்புணர்ச்சி தொடங்கி பரத்தைப் பிரிவு ஈறாக 25 அதிகாரங்களைக் கொண்டது

74] திருக்கோவையார் எத்தனை பாடல்களாலானது?
நானூறு பாடல்கள்

75] திருக்கோவையாரின் பாட்டுடைத்தலைவன் யார்?
தில்லைத் திருச்சிற்றம்பலவன்

76] "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என இறைவன் கூறியதிலிருந்து அறிந்து கொள்வது யாது?
திருவெம்பாவையும் திருக்கோவையாரும் இறைவனுக்கு மிகவும் விருப்பமான பாடல்கள் என்பதாகும்.

77] ஒன்பதாம் திருமுறையில் அடங்கும் நூல்கள் எவை?
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

78] ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் யாவர்?

| | |
|---|---|
| திருமாளிகைத்தேவர் | கண்டராதித்தர் |
| சேந்தனார் | வேணாட்டடிகள் |
| கருவூர்த்தேவர் | திருவாலியமுதனார் |
| பூந்துருத்திகாடநம்பி | புருடோத்தநம்பி |
| சேதிராயர் | |

79] திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
தெய்வத்தன்மை வாய்ந்த இசை பொருந்திய பா

80] திருப்பல்லாண்டு என்பதன் பொருள் யாது?
இறைவனை பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81] ஒன்பதாம் திருமுறையில் அடங்கும் பதிகங்கள் எத்தனை? பாடல் எத்தனை ?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருவிசைப்பா | — | 28 | பதிகம் | 288 | பாடல்கள் |
| திருப்பல்லாண்டு | — | 1 | பதிகம் | 13 | பாடல்கள் |
| மொத்தம் | | 29 | பதிகம் | 301 | பாடல்கள் |

82] திருவிசைப்பா பாடப்பட்ட பதிகள் எத்தனை ?
பதினான்கு சிவப்பதிகள் (14)

83] தில்லை மீது பாடப்பட்ட திருவிசைப்பா பதிகங்கள் எத்தனை ?
பதினாறு (16) பதிகங்கள்

84] திருமாளிகைத்தேவர் வாழ்ந்த காலப்பகுதி எது ?
கி. பி 10 ஆம் நூற்றாண்டு (கி. பி 985 — கி. பி 1014)

85] திருமாளிகைத்தேவர் யாரிடம் ஞானஉபதேசம் பெற்றார்?
சிவயோகி போகநாதரிடம்

86] திருமாளிகைத்தேவர் பாடிய திருவிசைப்பாவிலுள்ள பதிகங்கள் எத்தனை ? யார் மீது பாடினார் ?
நான்கு பதிகங்கள் — தில்லைநடராஜப் பெருமான் மீது

87] திருமாளிகைத்தேவர் திருநீற்றின் பெருமையினை எப் பதிகத்தில் பாடியுள்ளார் ?
3 ஆம் பதிகத்தில் 10 ஆம் பாடலில்

88] திருமாளிகைத்தேவர் ஐந்தெழுத்தின் மகிமையினை எப் பதிகத்தில் பாடியுள்ளார் ?
3 ஆம் பதிகம் 11 ஆம் பாடலில்

89] திருமாளிகைத் தேவர் செய்த அற்புதங்கள் எவை ?
1. திருவீழிமிழலையிலே திருத்தேரினை தானே ஓடச் செய்தார்.
2. திருவாவடுதுறையில் கோமுத்தீசுவரர் கோயில் மதிலிலுள்ள நந்திகளுக்கு உயிர் கொடுத்து அவைகளைக் கொண்டு நரசிங்க அரையன் படையினை முறியடிக்கச் செய்தார்.
3. பிணத்தினை சுடுகாடு வரை நடந்து செல்லச் செய்தார்.

90] திருமாளிகைத்தேவருக்கு எங்கே கோயில் கட்டப்பட்டது?
திருவாவடுதுறை மடத்தினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91] "ஒளிவளர் விளக்கே ......" என்ற திருவிசைப்பா பாடலில் கூறப்படும் முக்கிய கருத்து யாது ?

தில்லையம்பலத்தான் புகழ்

92] தில்லைநடராஜப் பெருமானின் தோற்றப் பொலிவை கூறும் பாடல் எது ?

"உயர்கொடி ஆடை ......"

93] சேந்தனார் வாழ்ந்த காலப்பகுதி எது ?

கி. பி. 10 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

94] சேந்தனார் அருளிய நூல்கள் எவை ?

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

95] சேந்தனார் பாடிய திருவிசைப்பா பதிகங்கள் எத்தனை? பாடல்கள் எத்தனை ?

மூன்று பதிகங்கள் — 34 பாடல்கள்

96] சேந்தனார் திருவிசைப்பா பாடிய திருத்தலங்கள் எவை? திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி

97] திருப்பல்லாண்டு பாடப்பட்ட பண் யாது ?
பஞ்சமம்

98] கருவூர்த்தேவர் வாழ்ந்த காலப்பகுதி எது ?

கி. பி 10 ஆம் நூற்றாண்டு

99] கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பா பதிகங்கள் எத்தனை ?

பத்து (10)

100] கருவூர்த்தேவரின் திருவுருவப்படம் வைத்து வழிபடப்படும் தலங்கள் எவை ?

கருவூர்ப்பசுபதீஸ்வரர் கோயில், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்

101] பூந்துருத்திநம்பிகாடநம்பி பாடிய திருவிசைப்பா, பதிகங்கள், பாடல்களில் இன்று கிடைக்கப்பெற்றவை எவை?

கோயிற்பதிகம் ஒன்று — பாடல் பத்து
திருவாரூர்பதிகம் ஒன்று — பாடல் இரண்டு

102] பூந்துருத்திநம்பிகாடநம்பி பாடிய திருவிசைப்பா பாடல்களின் சிறப்பு யாது ?

எவரும் பாடாத சாளர பாணி பண்ணில் பாடியது

103] பூந்துருத்திநம்பிகாடநம்பியின் பாடல்களில் பாடப்பட்டுள்ள அடியசர்கள் யாவர் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணம்புல்லர், கண்ணப்பர், நாவுக்கரசர், நம்பியாரூரர், சேரமான்

104] பூந்துருத்திநம்பிகாடநம்பி பாடிய பதிகம் எது ?
திருவங்கமாலை

105] சோழ மன்னனாகிய கண்டராதித்தர் யாருடைய மகன்?
சிற்றம்பலத்திற்கு பொன் வேய்ந்த முதலாம் பராந்தக சோழனின் மகன்

106] கண்டராதித்தர் அருளிய பதிகங்கள் எத்தனை ?
ஒரு பதிகம் — 10 பாடல்கள்

107] கண்டராதித்தர் திருக்கடைக் காப்புச் செய்யுளில் தம்மை எப்பெயரால் குறிப்பிட்டுள்ளார் ?
கோழிவேந்தன், தஞ்சையர்கோன்

108] கண்டராதித்தரின் திருவிசைப்பா பதிகத்தில் யாரைப் போற்றிப் பாடியுள்ளார் ?
திருச்சிற்றம்பலமுடையானை

109] வேணாட்டடிகள் அருளிய திருவிசைப்பா பதிகம், பாடல்கள் எத்தனை ?
ஒரு பதிகம் — 10 பாடல்கள்

110] வேணாட்டடிகள் எப்பதி மீது பாடல்கள் பாடியுள்ளார்?
தில்லையம்பதிக்கு

111] திருவாலியமுதனார் பாடிய திருவிசைப்பா பதிகங்கள், பாடல்கள் எத்தனை ?
நான்கு பதிகம் — 42 பாடல்கள்

112] இவர் எப்பதி மீது திருவிசைப்பா பதிகங்களைப் பாடினார்?
தில்லைப்பதி

113] புருடோத்தமநம்பி பாடிய திருவிசைப்பா பதிகங்கள் எத்தனை ? பாடல்கள் எத்தனை ?
பதிகங்கள் இரண்டு — பாடல்கள் 22

114] புருடோத்தமநம்பி யார் மீது பாடல்கள் பாடியுள்ளார் ?
தில்லை நடராஜப் பெருமான் மீது

115] சேதிராயர் வாழ்ந்த காலப்பகுதி எது ?
11 ஆம் நூற்றாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116] சேதிராயர் பாடிய பதிகங்கள் எத்தனை ?
பதிகம் ஒன்று — பாடல்கள் 10

117] 10 ஆம் திருமுறையில் அடங்கும் நூல் எது ? ஆசிரியர் யார் ?
திருமந்திரம் — திருமூலர்

118] திருமூலர் வாழ்ந்த காலம் எது ?
கி. மு. 6000 கி. மு. 100 வரையான 5900 ஆண்டுகள் என கருதப்படுகிறது.

119] திருமந்திரத்தின் அமைப்பு ஒழுங்கு யாது ? எத்தனை பாடல்கள் உண்டு ?
பாயிரவியல், ஒன்பது — 3000 பாடல்கள் [பிற்சேர்க்கையுடன் 3047]

120] ஒன்பது தந்திரங்களிலும் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் எவை ?
மாந்தர் பக்குவ நிலைபெற செய்யவேண்டிய கருமங்கள் கூறப்பட்டுள்ளது.

121] திருமந்திரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை ?
தமிழ்மூவாயிரம், தமிழ் ஆகமம், சுந்தரன் ஆகமம், மந்திர மாலிகை, மந்திரமாலை

122] திருமந்திரம் பாடுவதற்கு திருமூலர் ஆதாரமாகக் கொண்ட ஆகமங்கள் எவை ?
சாமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், கலோத்தரம், சுப்பிரபேதம் மகுடம் ஆகிய 9 ஆகமங்கள்

123] ஆகமங்களை திருமூலர் யாரிடம் கற்றார் ?
திருநந்திதேவர் என அழைக்கப்படும் நந்தியெம் பெருமானிடம் கற்றார்.

124] தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம் போல் சாத்திரத்தில் சிறந்தது எது ?
திருமந்திரம்

125] திருநந்திதேவர் அருள் பெற்று தில்லைக் கூத்துக்காண வந்த மூவரும் யாவர் ?
திருமூலர், பதஞ்சலிமுனிவர், வியாக்கிரமபாதமுனிவர்

126] "என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" எனப்பாடியவர் யார் ?
திருமூலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127] திருமந்திரம் படிப்பதால் ஏற்படும் பயன் யாது?
இம்மையில் பெறும் பேறும், மறுமையில் வீடும் கிடைக்கும்

128] ஆண்டுதோறும் திருமந்திர மகாநாடு கூட்டும் நிறுவனம் எது?
திருவாடுதுறை ஆதீனம்

129] பெரியபுராணத்தில் திருமூலர் எத்தனை பாடல்களில் சிறப்பிக்கப்படுகிறார்?
28 பாடல்களில்

130] தமிழில் வேதம் தந்த சிவபிரான் யார்?
திருமூலர்

131] சாத்தனூரில் இறந்த மூலன் உடலில் புகுந்தவர் யார்? எச்சந்தர்ப்பத்தில்?
திருமூலர்,
கைலாயத்திலிருந்து பொதிகைக்கு அகத்திய முனிவரைக் காண வந்தபோது

132] திருமுகப்பாசுரம் யாரால் யாருக்கு ஏன் எழுதப்பட்டது?
திருவாலவாயுடையாரால் சேரமன்னன் சேரமான் பெருமாளுக்கு பாணபத்திரனுக்கு பொருள் கொடுத்து அனுப்பும் பொருட்டு

133] பதினோராம் திருமுறை ஆசிரியர்கள் யாவர்?
1. திருவாலவாயுடையார்
2. காரைக்கால் அம்மையார்
3. ஐயடிகள் காடவர்கோன்
4. சேரமான் பெருமாள் நாயனார்
5. நக்கீரதேவ நாயனார்
6. கல்லாடதேவ நாயனார்
7. கபிலதேவ நாயனார்
8. பரணதேவ நாயனார்
9. இளம்பெருமானடிகள்
10. அதிராவடிகள்
11. பட்டினத்தடிகள்
12. நம்பியாண்டார் நம்பி

134] 11 ஆம் திருமுறையில் அடங்கும் நூல்கள் எவை?
நாற்பது

135] 11 ஆம் திருமுறைக்கு அமைந்த ஒப்பற்ற தனிச்சிறப்பு யாது?
இறைவனுடைய திருவருள் மொழியாகிய திருமுகப் பாசுரத்தை முதற்கண் பெற்று விளங்குவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136] 11 ஆம் திருமுறையில் சிவனைப் போற்றும் நூல்கள் எத்தனை உள்ளன?
இருபத்தைந்து

137] 11 ஆம் திருமுறையிலுள்ள முருகனைப் போற்றும் நூல் எது?
திருமுருகாற்றுப்படை

138] 11 ஆம் திருமுறையுள் அடங்கும் ஆனைமுகனைப் போற்றும் நூல்கள் எவை?
மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை
மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை
விநாயகர் திருவிரட்டை மணிமாலை

139] 11 ஆம் திருமுறையில் அடங்கும் திருத்தொண்டர் சிறப்பினை கூறும் நூல்கள் எத்தனை?
பதினொரு நூல்கள்

140] பதினோராம் திருமுறையில் சிதைவுற்றன போக இன்று எமக்கு கிடைத்துள்ள பாடல்கள் எத்தனை?
1430 பாடல்கள்

141] பதினோராம் திருமுறையில் கண்ணப்பரை பாடியவர்கள் யாவர்?
நக்கீரர், கல்லாடதேவர்

142] காரைக்காலம்மையார் அருளிய நூல்கள் எவை? அவற்றில் அடங்கும் பாடல்கள் எத்தனை?
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 1
11 பாடல்கள் பண் — நட்டபாடை
திருவாலங்காட்டுத் மூத்த திருப்பதிகம் 2
11 பாடல்கள் பண் — இந்தளம்
திருவிரட்டை மணிமாலை 20 பாடல்
அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள்

144] காரைக்கால் அம்மையார் இலக்கியத்தில் செய்த புதுமைகள் எவை?
1. பக்தி இலக்கியங்களை விருத்தப்பா மூலம் முதன் முதலில் வெளிப்படுத்தியமை.
2. பதிக முறையைத் தோற்றுவித்தவர் — பதிக இறுதியில் அதன் பயனைக் கூறியவர்.
3. முத்திரைக் கவிமுறையை தோற்றுவித்து அதில் தன்னை காரைக்காற்பேய் எனக் குறிப்பிட்டுள்ளார்.
4. அந்தாதி முறையில் சிறப்பாகப்பாடி அற்புதத் திருவந்தாதி என்ற சிறப்புப் பெயர் ஏற்படச் செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145] காரைக்காலம்மையார் செய்த அற்புதங்கள் எவை?

இறைவனிடம் மாங்கனி பெற்றமை, பேய் வடிவம் பெற்றமை, வெள்ளிமால் மலையில் தலையால் நடந்தமை, இறைவனால் அம்மையே என அழைக்கப் பட்டமை, இறைவனது திருநடனம் கண்டமை, திருக் கைலாயக் காட்சியை காணும் பேறு பெற்றமை

146] காரைக்காலம்மையார் வாழ்ந்த காலப்பகுதி எது?

5ம் நூற்றாண்டு

147] ஐயடிகள் காடவர் கோன் என்ற பெயர் வரக் காரணம் யாது?

அரசாட்சி துன்பமுடையது என உணர்ந்து துறவியாக வாழ்ந்தமையால்

148] இவர் இயற்றிய நூல் எது? பாடல்கள் எத்தனை?

ஷேத்திரவெண்பா 24 பாடல்கள்

149] ஐயடிகள் காடவர்கோன் பாடிய வெண்பாக்களில் பேசப் படுபவை எவை?

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உற்றார், உறவினர் இறுதியில் கைவிடுதல், முதுமைக் காலத்துன்பம் என்பன பேசப்படுகின்றன

150] ஐயடிகள் காடவர்கோன் பாடிய வெண்பாக்களில் கிடைத் தவை எத்தனை? அவற்றை படிப்பதால் ஏற்படும் பயன் யாது?

24 வெண்பாக்கள்

படிப்பவர் உள்ளத்தில் மெய்யறிவை உண்டாக்கத் தக்கது

151] சேரமான் பெருமாளுக்கு வழங்கும் சிறப்புப் பெயர்கள் எவை?

பெருமாக் கோதையார், கழறிற்றறிவார்

152] சேரமான் பெருமாளுக்கு கழறிற்றறிவார் என்ற பெயர் வரக் காரணம் யாது?

இவர் எல்லா உயிர்களும் பேசுவதை புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர் என்பதால் இவ்வாறு அழைக்கப் பட்டார்.

153] சேரமான் பெருமாள் இறைவன் மீது கொண்ட பக்திக்கு கிடைத்த வெகுமதி என்ன ?

சிவபெருமான் தான் நடமாடும் போது தன் காலில் அணிந்திருக்கும் சிலம்பொலியினை கேட்குமாறு அருள் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154] சேரமான் பெருமாள் பாடிய திருப்பாடல்கள் எவை? எத்தனை?

பொன்வண்ணத்தந்தாதி — 100 பாடல்கள்
திருவாரூர் மும்மணிக்கோவை — 30 பாடல்கள்
திருக்கைலாய ஞான உலா — 197 ஈரடிவெண்பாக்கள்

155] பொன்வண்ணத்தந்தாதி பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
சுந்தரரைத் தேடி சேரமான் பெருமான் சிதம்பரம் சென்ற போது பாடப்பட்டது.

156] திருக்கைலாய ஞான உலா பாடப்பட்ட சந்தர்ப்பம் எது?
கைலையில் சேரமானை உட்செல்லவிடாது நந்தியெம் பெருமான் தடுத்த போது இறைவனை நினைத்து பாடியது.

157] திருக்கைலாய ஞான உலா பாடியமையால் சேரமான் பெருமானுக்கு சிவபிரான் திருவாய் மலர்ந்தருளியது என்ன?
"நம்முடைய கணங்களுக்கு நாதனாய் இரு"

158] நக்கீரர் யாருடைய அரசவைப் புலவராக இருந்தார்?
பாண்டிய மன்னன் அரசசபையில்.

159] நக்கீரருக்கு வழங்கும் சிறப்புப் பெயர் யாது?
பொய்யடிமையில்லாப் புலவர், கடைச்சங்கத்து தலைமைப்புலவர், மதுரைக்கணக்காயனார் மகன்.

160] நக்கீரர் எழுதிய நூல்கள் எவை? பாடல்கள் எத்தனை?

| | | |
|---|---|---|
| கையிலை பாதி காளத்தி பாதி | — 100 | பாடல்கள் |
| திருஈங்கோய் மலை எழுபது | — 70 | ,, |
| திருவலஞ்சுழி மும்மணிக்கோவை | — 15 | ,, |
| திருஎழு கூற்றிருக்கை | — 59 | ,, |
| பெருந்தேவபாணி | — 71 | ,, |
| கோபப் பிரசாதம் | — 100 | ,, |
| கார் எட்டு | — 8 | ,, |
| போற்றித்திருக்கலி வெண்பா | — 98 | ,, |
| திருமுருகாற்றுப்படை | — 315 | பாடல்கள் |
| திருக்கண்ணப்பதேவர் திருமறம் | — 257 | அடிகள் |

161] இறைவன் பாடிய எப்பாடலில் நக்கீரர் பொருட்குற்றம் கண்டார்?
"கொங்குதேர் வாழ்க்கை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162] நக்கீரர் உரைசெய்த நூல் எது?
களவியல்.

163] கோபப்பிரசாதத்தில் நக்கீரர் புகழ்ந்து பாடிய பக்திமான்கள் யாவர்?
கண்ணப்பர், சண்டேசுவரர், சாக்கியர், செங்கட்சோழன்

164] திருமுருகாற்றுப்படை எத்தனை பிரிவுகளைக் கொண்டது அவை எவை?
ஆறு பிரிவுகளைக் கொண்டது.
திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை.

165] கல்லாட தேவநாயனார் வாழ்ந்த காலப்பகுதி எது?
கி. பி. 6ம் நூற்றாண்டு.

166] கல்லாட தேவநாயனார் என்றபெயர் வரக்காரணம் யாது?
கல்லாடம் என்ற சிவப்பதியில் வாழ்ந்தமையால் இப்பெயர் பெற்றார்.

167] கல்லாட தேவநாயனார் பாடிய நூல் எது?
திருக்கண்ணப்பதேவர் திருமறம்

168] திருக்கண்ணப்பதேவர் திருமறம் எத்தனை அடிகளால் ஆனது? பாவினம் எது?
38 அடிகள் — அகவல் பா.

169] திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தில் பேசப்படுவது என்ன?
கண்ணப்பநாயனார் தன் கண்ணைத் தோண்டிய வீரச் செயல் பற்றி.

170] கபிலதேவநாயனார் அருளிச் செய்த நூல்கள் எவை? பாடல்கள் எத்தனை?

| | | |
|---|---|---|
| மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை | — | 20 பாடல்கள் |
| சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை | — | 37 ,, |
| சிவபெருமான் திருவந்தாதி | — | 100 ,, |

171] இரட்டை மணிமாலை என்பதன் கருத்து யாது?
இரண்டு பாவினங்களை வைத்து ஒன்றன்பின் ஒன்றாக மாறிமாறிப் பாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172] மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை யாரைப் போற்றி பாடுகிறது?

விநாயகரை.

173] சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை எவற்றைக் கூறு கிறது?

சிவபெருமானின் பெருமை அடியார்களுக்கு அருள்புரியும் முறை, சிவநிந்தனையால் ஏற்படும் சிறுமை, திருவருட்ச் சிறப்பு.

174] சிவபெருமான் திருவந்தாதியில் பாடப்பட்டுள்ள முக்கிய திருப்பதிகள் எவை?

திருவாரூர், திருவெற்றியூர், திருவண்ணாமலை, திருவேங் கடம், திருமறைக்காடு போன்றன.

175] பரணதேவநாயனார் வாழ்ந்த காலப்பகுதி எது?

கி. பி. 6ம் நூற்றாண்டு.

176] பரணதேவநாயனார் பாடிய நூல் எது? எத்தனை பாடல்கள்?

சிவபெருமான் திருவந்தாதி — 101 பாடல்கள்

177] பரணதேவநாயனார் பாடிய அந்தாதியின் அமைப்பு முறை என்ன?

வேந்தரைப்பாடி உலகுக்கும், உடலுக்கும், உறுதிகாட்டி யது போன்று உயிர்க்கு உறுதி பயக்கும் சிவபெருமா னைப் பாடுகிறார்.

178] இளம் பெருமானடிகள் வாழ்ந்த காலம் எது?

கி. பி. 6ம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

179] இளம்பெருமானடிகள் பாடிய நூல் எது? எத்தனை பாடல்கள்?

சிவபெருமான் மும்மணிக்கோவை — 30 பாடல்கள்

180] இளம்பெருமானடிகள் பாடிய பாவினங்கள் எவை?

கட்டளைக் கலித்துறை, அகவல், வெண்பா.

181] அதிராவடிகள் வாழ்ந்த காலம் எது?

கி. பி. 9ம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கருதப்படு கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

182] அதிராவடிகள் பாடிய பிரபந்தம் எது? எத்தனை பாடல்கள்?

மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை—30 பாடல்கள் (கிடைத்தவை 23 பாடல்)

183] பட்டினத்தடிகள் வாழ்ந்த காலம் எது?

9ம் நூற்றாண்டின் நடுப்பகுதி.

184] பட்டினத்தடிகளுக்கு வழங்கும் வேறுபெயர்கள் எவை?

பட்டினத்துப்பிள்ளையார், திருவெண்காடர், திருவெண்காட்டடிகள்.

185] பட்டினத்தடிகள் பாடிய நூல்கள் எவை? பாடல்கள் எத்தனை?

| | | | |
|---|---|---|---|
| கோயில் நான்மணிமாலை | — | 40 | பாடல்கள் |
| திருக்கழுமல மும்மணிக்கோவை | — | 30 | ,, |
| திருவிடைமருதூர் மும்மணிக்கோவை | — | 30 | ,, |
| திருவேகம்பம் உடையார் திருவந்தாதி | — | 100 | ,, |
| திருவெற்றியூர் ஒருபா ஒருபஃது | — | 10 | ,, |

186] திருக்கழுமல மும்மணிக் கோவையில் கூறப்பட்டுள்ள விடயம் யாது?

திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாறு

187] திருவிடை மருதூர் மும்மணிக்கோவை கூறும் விடயங்கள் எவை?

திருமாலுக்கு இறைவன் சக்கரம் கொடுத்தது, வரகுண பாண்டியனின் அன்புப் பெருக்கு, சிறுத்தொண்டர் வரலாறு, கோச்செங்கணான் வரலாறு, சாக்கியநாயனார் வரலாறு

188] பட்டினத்தடிகள் செய்த அற்புதங்கள் எவை?

தாயாரின் சிதைக்கு பச்சை வாழைமடலில் தீமூட்டியமை

தம்மை மணற் குழியில் புதைக்கச் செய்து வேறு இடத்தில் தோன்றியமை

கழுமரத்தை எரித்தமை

புதைகுழியில் சிவலிங்கமாக சமாதியடைந்தமை

189] நம்பியாண்டார் நம்பி வாழ்ந்த காலப்பகுதி எது?

கி. பி. 10ம் நூற்றாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190] நம்பியாண்டார் நம்பி பாடிய நூல்கள் எவை?

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி 100 பாடல்கள்
ஆளுடையபிள்ளையார் திருச்சண்பைவிருத்தம்
11 பாடல்கள்
ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை
30 பாடல்கள்
ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை
143 ஈரடிவெண்பாக்கள்
ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்
49 பாடல்கள் [கிடைத்தது]
ஆளுடையபிள்ளையார் திருத்தொகை 65 பாடல்கள்
திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை 11 பாடல்கள்
கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 80 பாடல்கள்
திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
20 பாடல்கள்
திருத்தொண்டர் திருவந்தாதி 87 பாடல்கள்

191] திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறப்படுபவை எவை?

63 தனியடியார்கள், 9 தொகையடியார்களின் வரலாறு.

192] 12ம் திருமுறையை அருளிச் செய்தவர் யார்? அதன் காப்பியத் தலைவன் யார்?

சேக்கிழார்.
சுந்தரமூர்த்திநாயனார்.

193] 12ம் திருமுறையிலுள்ள நூல் எது? பாடல்கள் எத்தனை?

பெரிய புராணம் — 4286 பாடல்கள்

194] பெரிய புராணத்திற்கு வழங்கும் வேறுபெயர்கள் எவை?

திருத்தொண்டர் புராணம், மாக்கதை.

195] பெரியபுராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது?

இரண்டு காண்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196] பெரியபுராணம் எத்தனை சருக்கங்களைக் கொண்டது அவை எவை?

பதின்மூன்று
திருமலைச் சருக்கம்
தில்லைவாழ் அந்தணர் சருக்கம்
இலைமலிந்த சருக்கம்
மும்மையால் உலகாண்ட சருக்கம்
திருநின்ற சருக்கம்
வம்பறாவரி வண்டுச் சருக்கம்
வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்
பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம்
கறைக்கண்டன் சருக்கம்
கடல் சூழ்ந்த சருக்கம்
பத்தராய்ப் பணிவார் சருக்கம்
மன்னியசீர்ச் சருக்கம்
வெள்ளானைச் சருக்கம்

197] பெரிய புராணம் தோன்றுவதற்கு காரணமாக இருந்த மன்னன் யார்?

அநபாயச்சோழன் எனப்படும் 2ம் குலோத்துங்க சோழன்

198] பெரியபுராணம் எங்கே பாடப்பட்டது?

சிதம்பரத்து ஆயிரங்கால் மண்டபத்தில்

199] பெரியபுராணம் பாடுவதற்கு அடி எடுத்துக் கொடுத்தவர் யார்?

சிவபெருமான்.

200] அவ்வடி யாது?

உலகெலாம்.

''வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை மஹாத்மா அச்சகம் - கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org